மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.80/2018

வாக்குமூலம்: பி.வா.சா.2 கிருஷ்ணன்

18.06.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு

8, 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– 8ம் பிரதிவாதி ராமசுந்தரம் உங்களுடைய மூத்த சகோதரர் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்தில் வழக்கமாக கே.ஆர்.ஜி.சுந்தரம் என கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டாவில் 6ம் பிரதிவாதி பெயர் 4வது வரிசையில் கே.ஆர்.ஜி.சுந்தரம் என உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்து மற்றும் வேறு சில சொத்துக்கள் ஆதியில் கணியூர் கிருஷ்ண அய்யர் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். கணியூர் கிருஷ்ண அய்யர் கடந்த 12.05.1894ம் தேதி உயில் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அவர் 1898ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்தில் சொத்துக்களை அவருக்குப் பின்னால் அவருடைய மூத்த ஆண் வாரிசு நிர்வகிக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலில் கண்ட சொத்துக்கள் பல்வேறு நிறுவனங்களுக்கு தர்ம காரியங்களுக்கு பயன்படுத்த ஒதுக்கப்பட்டு, அதை நிர்வகிக்க மூத்த ஆண் வாரிசுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியிடம் உங்கள் குடும்ப வாரிசுகள் பட்டியலை நீங்கள் கொடுத்திருந்தீர்கள் என்றால் சரிதான். அவர் வழக்கறிஞர் எனது இதர வழக்குகளை நடத்தி வந்ததால் அதற்காக அந்த பட்டியலை அவரிடம் கொடுத்திருந்தேன். இவ்வழக்கில் அந்த பட்டியல் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் கணியூர் கிருஷ்ண அய்யர், சுபலட்சுமியம்மாள் ஆகியோரின் வாரிசுரிமை பட்டியல் அது என்றால் சரிதான். மேற்படி 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட வாரிசு விபரப் பட்டியல் 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த உயில்படி சொத்துக்களை நிர்வகிக்க இப்பொழுதைய மூத்த ஆண் வாரிசு 8ம் பிரதிவாதி சி.ராமசுந்தரம் என்றால் சரிதான். இதற்கு முன்பு உங்கள் தகப்பனார் கே.எஸ்.சந்திரசேகரன்தான் மூத்த ஆண் வாரிசாக சொத்துகளை நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள வாரிசு விபரங்கள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து வாதிகளுக்கும் 6ம் பிரதிவாதிக்கும் மட்டும் பாத்தியப்பட்டதாக சொல்வது சரியா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.4ல் கண்ட நபர்கள் அனைவருக்கும் உரிமை

உள்ளது. 26.02.2010ம் தேதி பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணப்படி பி.வா.சா.ஆ.4ல் கண்ட வாரிசுகள் அனைவரும் சேர்ந்து பொதுவாக பாத்தியப்பட்ட சொத்து ஒன்றினை 3ம் நபருக்கு விற்பனை செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டாவில் இல்லாத நபர்களுக்கு சொத்தில் உரிமை இல்லை என வாதிகள் சொல்வது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டா தவறாக வழங்கப்பட்டதாக சொல்லி வருவாய் கோட்டாட்சியரிடம் உங்கள் தகப்பனார் மேல்முறையீடு செய்திருந்தார் என்றால் சரிதான். 03.12.2018ம் தேதி என் தகப்பனார் இறந்தார். பின்னிட்டு 8ம் பிரதிவாதி தனியாக உங்கள் தகப்பனார் மேல்முறையீடில் நடவடிக்கை இல்லை என்பதால் ஒரு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன் நகல் பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான். பட்டாவில் இல்லாத இதர வாரிசுகளுக்கும் சொத்தில் உரிமை உள்ள நிலையில் 2, 3, 4 பிரதிவாதிகளுடன் நீங்கள் தனியாக 20.11.2017ம் தேதி ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில் நீங்கள் இதர வாரிசுகளையும் சேர்த்துக்கொண்டு கிரையம் ஏற்படுத்திக்கொடுப்பதாக குறிப்பிட்டுச் சொல்லியுள்ளீர் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் பழனி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.276/2017 என்ற வழக்கும் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.107/2016 ஆகிய வழக்குகள் தாக்கல் செய்து அவை அவர்கள் நடத்த முன்வராததால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u> வா.சா.ஆ.1 பட்டாவில் சொல்லப்பட்ட 6 நபர்கள்தான் அவரவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கு பிரதிநிதிகளாக இருந்து இதுவரை பதிவு செய்யப்பட்ட கிரையங்கள், வில்லங்கங்கள் ஏற்படுத்தி வந்தார்கள் என்றால் அவ்வாறு சொல்லமுடியாது. கிரையங்கள் ஏற்படுத்த அனைத்து வாரிசுகளும் கையொப்பம் செய்து கொடுப்போம். கிரையத்திற்கு முன்பு ஏற்படும் ஒப்பந்தங்கள், ரசீதுகள் உள்ளிட்டவைகளில் மேற்படி 6 நபர்கள் மற்றவர்களுக்காகவும் சேர்ந்து கையொப்பம் செய்வார்கள். 8ம் பிரதிவாதி எந்த தேதியில் பட்டா தவறு என சொல்லி கோட்டாட்சியரிடம் பி.வா.சா.ஆ.2 மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. வாதிகள் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் 8ம் பிரதிவாதி பட்டா குறித்து மேல்முறையீடு செய்த விபரம் தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்பு எனது அப்பா தாக்கல் செய்த மேல்முறையீடு பற்றி தெரியும். என் அப்பா தாக்கல் செய்த மேல்முறையீட்டின் முடிவு என்னவென்று தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் தகப்பனார் எதற்காக மேல்முறையீடு செய்தார் என்றால் பட்டாவில்

அனைத்து வாரிசுகளின் பெயர்களும் சேர்க்கப்பட வேண்டும் என சொல்லி மேல்முறையீடு செய்தார். அந்த மேல்முறையீட்டு நகல் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 8ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 பட்டாவில் உள்ள சொத்தில் உரிமை ஏற்பட பட்டாவில் அவர் பெயர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு வாரிசுகள் மற்றும் அவர்களின் உரிமைகளை தீர்மானிக்க ஏற்பட்ட வழக்கு அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில் ரூ.30,00,000/- விலை பேசி முன்பணம் ரூ.10,00,000/- நீங்கள் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் மேற்படி முன்தொகை பெற்றுக்கொண்டது உண்மைதான் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்தம் சட்டப்படி நிலைக்கத்தக்க ஒன்று அல்ல என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :-</u> இல்லை.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R KARTHIKEYAN

Digitally signed by R KARTHIKEYAN
Date: 2024.06.18 18:10:18 +0530

District Munsif,
Palani.